[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**90—**

## புதிய வட்டம்

***22333—திரு. நயினார் நாகேந்திரன்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து மானூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டமானது 4 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டிருப்பதாலும், நிர்ணயிக்கப்பட்ட வருவாய் கிராமங்கள் 30–க்கும் குறைவாக இருப்பதாலும், அரசாணை எண் 176 (1டி), வருவாய்த் துறை, நாள் 15–6–2012–ன்படி, திருநெல்வேலி வட்டத்தைப் பிரித்து மானூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு கண்டங்களில், 63 நாடுகளில் வாழ்கின்ற உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்னல்களில் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்களின் ஒரே பாதுகாவலர், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மானூர் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதி. தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. மாண்புமிகு அம்மா அவர்களின்*

2013 மார்ச் 27]

அரசுத் திட்டங்களை இந்தப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக. திருநெல்வேலி வட்டத்தினை இரண்டாகப் பிரித்துத் தருமாறு கேட்டுக்கொள்வதோடு, திருநெல்வேலி தாலுகா அலுவலகம், அதற்கடுத்தாற்போல் உள்ள சங்கரன்கோவில் தாலுகா அலுவலகம், இந்த இரண்டு தாலுகா அலுவலகங்களுக்கும் இடையே சுமார் 56 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. இந்த இரண்டு தாலுகாக்களுக்கு மத்தியில் மானூர், மேலநீலிதநல்லூர் என்ற இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு ஒன்றியங்களின் கடைக்கோடியில் இருக்கின்ற மக்கள் தாலுகா அலுவலகத்திற்கு சராசரியாக சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவிலே வந்து பட்டாக்கள் பெறுவதற்கும், அம்மா அவர்களின் திட்டங்களான ஏழையெளிய மற்றும் நலிந்தோர் திட்டங்களைப் பெறுவதற்கும் சிரமமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து, திருநெல்வேலி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து மானூரைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு புதிய வட்டம் அமைத்துத் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு விரைந்து போய்ச் சேர வேண்டும் என்பதே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசினுடைய குறிக்கோள் ஆகும். 'அரசை நாடி மக்கள்' என்றிருந்த நிலையை மாற்றி, 'மக்களை நாடி அரசு' என்கின்ற குறிக்கோளுடன் மக்களின் அன்றாடத் தேவைகளை விரைந்து பெறுவதற்கும், கால விரயத்தை கட்டுப்படுத்தி மக்களுடைய அலைச்சலைக் குறைக்கின்ற வகையிலே, பெருகி வருகின்ற மக்கள் தொகையினுடைய அடிப்படையில், வருவாய்த் துறையிலே மறுமலர்ச்சி ஏற்படுத்துகின்ற விதத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, புதிய வட்டங்களைப் பிரித்து உருவாக்குவதற்கு ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளார்கள். வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர், நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகியோரைக் கொண்ட இந்தக் குழு, தமிழ்நாட்டிலே உள்ள பிரிக்கப்படுகின்ற வட்டங்களில் மக்கள் தொகையினுடைய

அடிப்படையில், அதனுடைய பரப்பளவினுடைய அடிப்படையில், வருவாய் கிராமங்களினுடைய அடிப்படையில், ஆய்வு செய்து அளிக்கப்படுகின்ற பரிந்துரைகளின் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–10

தமிழ்நாட்டிலே 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகையானது கணக்கெடுக்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டிலே மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டதன் அடிப்படையிலே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி மக்கள்தொகையின் எண்ணிக்கையை பூர்த்தி செய்வதாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி மக்களுடைய விருப்பத்தினைப் பூர்த்தி செய்யவேண்டுமென்கிற பேராவலின் அடிப்படையில், உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில், கல்குளம் வட்டத்தில், தற்போது 64 வருவாய் கிராமங்கள் உள்ளன. மக்கள்தொகை அதிக அளவில் இருப்பதுடன் பரப்பளவில் மிகப் பெரியது. வட எல்லையான அப்பர் கோதையாறிலிருந்து தக்கலையில் இருக்கும் வட்டாட்சியர் அலுவலகம் வரை வந்து செல்ல சுமார் 80 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே,

2013 மார்ச் 27]

பொதுமக்கள் வசதிக்காக கல்குளம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருவட்டாறு அல்லது செருப்பாலூரை தலைமையிடமாகக்கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியைப் பொறுத்தவரையில், அரசு பதவியேற்ற 20 மாத காலத்தில் தமிழகத்தில் 9 புதிய வட்டங்களை அறிவித்து, மக்களுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது, ஐந்தாண்டுக் காலத்தில் மொத்தமாக 14 வட்டங்களை மட்டுமே உருவாக்கினார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 20 மாத கால பொற்கால ஆட்சியில் 9 வட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மக்களுடைய தேவைகள், அரசினுடைய திட்டங்கள் மக்களுக்கு விரைந்து சென்று சேரவேண்டும் என்கின்ற அடிப்படை நோக்கத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து திட்டங்களைத் தீட்டி வருகிறது. அந்த அடிப்படையிலேகூட நேற்று இந்தச் சட்டமன்றப் பேரவையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. சு. குணசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அதிகாரிகளைத் தேடி மக்கள் செல்கின்ற காலம் மாறி மக்களைத் தேடி அதிகாரிகள் செல்லக்கூடிய அம்மா திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாகப் பெருமையோடு சுட்டிக்காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திட்டங்களை விரைந்து பெறவேண்டுமென்கின்ற நோக்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற காரணத்தினாலே அவை குழுவினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாவட்ட

ஆட்சியருடைய அறிக்கைகள் பெறப்பட்டு, புதிய வட்டங்கள் உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஒர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### இலங்கை அரசின் தமிழின அழிப்பினைக் கண்டித்து, சர்வதேச பொது விசாரணை கோரியும் மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இலங்கை அரசின் தமிழின அழிப்பினைக் கண்டித்து, சர்வதேச பொது விசாரணை கோரியும், மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும், தமிழகம் முழுவதுமுள்ள கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் குறித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. அர. சக்கரபாணி, முனைவர் கோவி. செழியன், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. கா. ராமச்சந்திரன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. ந. நஞ்சப்பன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து, திரு. வெ. பொன்னுப்பாண்டி, மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் ஆகியோரும் சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். பாட்டாளி மக்கள்